## சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டம் – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – குழந்தைகள் மையத்தில் பணிபுரியும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பல்வேறு அலுவலர்களால் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்துகொள்ள செல்வதற்காக வழங்கப்படும் பயணச் செலவுத் தொகை ரூ.20/– லிருந்து ரூ.40 ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்படுகிறது

---

**சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந7) துறை**

அரசு ஆணை (நிலை) எண்: 11

நாள் : 12–01–2010
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 28

படிக்கப்பட்டது :

1) அரசாணை (நிலை) எண்.193, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள்.09.04.1991.

மீண்டும் படிக்கப்பட்டது

2) முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரின் கடித எண்.16616/இ3–2/2009, நாள் 10.12.2009, மற்றும் 05.01.2009.

******

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மாவட்ட திட்ட அலுவலர் மற்றும் குழந்தை வளர்ச்சித் திட்ட அலவலரால் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் குழந்தை மையங்களில் பணிபுரியும் (அங்கன்வாடி மையம் ) பணியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வரையறுக்கப்பட்ட படி ரூ.20 அல்லது உள்ளபடியாக செலவழிக்கப்பட்ட பேருந்து கட்டணம் அளிக்குமாறு ஆணை வெளியிடப்பட்டது.

/த.பி.பா/

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21.11.2009 அன்று தமிழ்நாடு சத்துணவு மற்றும் குழந்தைகள் மையப் பணியாளர்கள் சங்கங்களின் சார்பாக நடைபெற்ற நன்றி பாராட்டு விழாவில் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் பல்வேறு அலுவலர்களால் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்து கொள்ளச் செல்வதற்காக வழங்கப்படும் பயணச் செலவுத் தொகை 20 ரூபாயிலிருந்து 40 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் மீது ஆணை வெளியிடும் பொருட்டு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலாளர் / ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் இயங்கும் குழந்தை மையங்களில் (அங்கன்வாடி மையம்) பணிபுரியும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு பல்வேறு அலுவலர்களால் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்து கொள்ள செல்வதற்காக வழங்கப்படும் பயணப்படிகள் மாதம் ஒன்றுக்கு ரூ.20/– லிருந்து ரூ.40/– ஆக உயர்த்தி வழங்க ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக குழந்தைகள் மையங்களில் (அங்கன்வாடி மையம்) பணிபுரியும் பணியாளர்களுக்கு பல்வேறு அலுவலர்களால் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்து கொள்ள செல்வதற்காக வழங்கப்படும் பயண செலவுத் தொகை ரூ.20/– லிருந்து ரூ.40/– ஆக உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.

5. மேற்கண்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்:-

2236–சத்துணவு 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 101 – சிறப்பு சத்துணவுத் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – III மத்திய அரசு பொறுப்பேற்பவை – SF – ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டப்பணிகள் – நிலை 3 – 05 – அலுவலகச் செலவுகள் 02 – ஏனைய சில்லறைச் செலவுகள் (து.தொ.கு. .2236–02.101–SF–0526)

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.12A/JS(APA)/SW/2010, நாள்.11.1.2010–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. இராம மோகனராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை – 113.

/த.பி.பா/

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட திட்ட அலவலர்கள்
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்
(முதன்மை செயலர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், சென்னை.113 வழியாக)
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநிலத் தலைமை கணக்காயர், சென்னை – 18 (பெயரில்)
மாநிலத் தலைமைக் கணக்காயர் (தணிக்கை / I / II). சென்னை – 18
அரசு செயலாளர், நடுவண் அரசு,
மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம்,
சாஸ்திரி பவன், புதுதில்லி.

நகல் :-
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை.9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9
மாண்புமிகு முதலமைச்சர் அலவலகம், சென்னை.9.
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் அனைத்துப் பிரிவுகள்,
நிதி(சந) த்துறை, சென்னை .9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
13-1-2010